செய்தி வெளியீடு எண்: 196 நாள்: 13.03.2008

பத்திரிகை செய்தி

மருத்துவ கல்லூரி மூலம் நடைபெறும் தேசிய ஊரக நல வாழ்வு இயக்கத்தின் திட்டம் – வளரிளம் பருவத்தினர் நல வாழ்வு

உலக மக்கள் தொகையில் 5ல் ஒருபாகம் (10 முதல் 19 வயது வரை) வளரிளம் பருவத்தினர் உள்ளனர். பெரும்பான்மையான வளரிளம் பருவத்தினர் வளர்ந்து வரும் நாடுகளில் உள்ளனர். வளரிளம் பருவத்தினர் குழந்தைப் பருவத்தை கடந்தவர்கள், பெரியவர்களின் நிலையை எட்டாதவர்கள், வளர்ந்து வரும் சூழலுக்கு ஏற்றவாறு வளரிளம் பருவத்தினரின் தேவைகள் மாறுபடும். வளரிளம் பருவத்தினர் சிலர் எளிதில் தொற்றுக்கு ஆளாகக் கூடியவர்களாக இருப்பார்கள். அவர்கள் நலவாழ்வு உதவி அவசியம் தேவைப்படும் நிலையில் உள்ளவர்கள்.

இன்றைய மற்றும் எதிர்கால சமுதாயத்தின் சாதகமான பிரிதிநிதித்துவமாக வளரிளம் பருவத்தினர் உள்ளனர். கடந்த கால சந்ததியினரைவிட தற்போதைய வளரிளம் பருவத்தினர் பல அபாயங்களைச் சந்திக்க கூடிய சூழ்நிலையில் உள்ளார்கள் மற்றும் குறைவான ஆதரவே உள்ளவர்களாக உள்ளார்கள்.

மேம்மைப் படுத்தப்பட்ட தேவைகள் வளரிளம் பருவத்தினருக்கு கிடைப்பதை பொறுத்து நாகரிக சமுதாயம் அமையும் வளரிளம் பருவத்தினருக்கு ஏற்படக் கூடிய சுகாதாரம் சார்ந்த பிரச்சனைகளை நல வாழ்வு பணிகளால் மட்டுமே சரி செய்யமுடியும். தோழமை உணர்வுடன்

பலமாற்றங்களுடன் நலவாழ்வுப்பணிகள் அவர்களுக்குத் தேவைப்படுகிறது.

இந்தியாவில் வளரிளம் பருவத்தினரின் நலவாழ்வு நிலை

- 45 சதவீதம் வளரிளம் பெண்கள் குறைவான ஊட்டச்சத்து நிலையில் உள்ளார்கள்
- 25 சதவீதம் வளரிளம் ஆண்கள் குறைவான ஊட்டச்சத்து நிலையில் உள்ளார்கள்
- 25 சதவீதம் பெண்கள் இளம் வயதில் (15 வயதுக்கு குறைவாக) திருமணம் செய்து கொள்கிறார்கள்
- 54 சதவீதம் ஆண்கள் இளம் வயதில் (18 வயதுக்கு குறைவாக) திருமணம் செய்து கொள்கிறார்கள்
- 20 முதல் 30 சதவீதம் வளரிளம் ஆண்கள் பாலியல் செயலில் ஈடுபடுகிறார்கள்
- 10 சதவீதம் வளரிளம் பெண்கள் பாலியல் செயலில் ஈடுபடுகிறார்கள்
- 59 சதவீதம் வளரிளம் பருவத்தினர் கருத்தடைசாதனத்தைப்பற்றி அறிந்துள்ளனர்
- 49 சதவீதம் வளரிளம் பருவத்தினர் கருத்தடைமுறைகளை அறிந்துள்ளனர்

- 4.5 சதவீதம் வளரிளம் பருவத்தினர் போதை மருந்துக்கு அடிமையாக உள்ளனர்.
- எச்.ஐ.வி தொற்றுகள் உள்ளவர்களில் 50 சதவீதம் 10 முதல் 25 வயது வரை உள்ளவர்கள்
- 1 முதல் 4 மில்லியன் வளரிளம் பெண்கள் கருக்கலைப்பு செய்து கொள்கிறார்கள்

வளரிளம் பருவத்தினரின் சுகாதாரப் பிரச்சனைகளைப் போக்குவதற்காகவும் அவர்களுக்கு ஆரோக்கியமான வாழ்வினை உருவாக்குவதற்காகவும் **இந்தியாவிலேயே முதன்முறையாக புதிய கோணத்தில் தமிழக மாநில ஊரக நலவாழ்வு இயக்கம் மருத்துவ கல்லூரிகள் மூலம் வளரிளம் பருவத்தினருக்கு நலவாழ்வு சேவைகளைத் துவக்கிஉள்ளது.**

வளரிளம் நலவாழ்வு திட்டம்

இலக்கு

பேறுசார் மற்றும் குழந்தை நலத்திட்டம் 2–ன் இலக்கான தாய் மரண விகிதம், சிசு மரண விகிதம், இளஞ்சிசுமரண விகிதம் மொத்த கருவுறு விகிதம் இவைகளை குறைப்பதற்கு, வளரிளம் பருவத்தின் நலவாழ்வுப் பணிகள் அத்தியாவசியமாகும். ஆகவே மருத்துவக் கல்லூரியின் மூலம்

தற்போதுள்ள நலவாழ்வு பணிகளுடன் வளரிளம் நலவாழ்வுப் பணிகளையும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

பணிகள்

நோய்தடுப்புத் பணிகள், சிகிச்சை அளித்தல், ஆலோசனை வழங்கல் அனைத்தும் ஒருங்கிணைந்து ஒருமுகப்படுத்தி ஒரே இடத்தில் வழங்குதல்

பயனாளிகள்

10 முதல் 19 வயதுள்ள வளரிளம் பருவத்தினர்

மருத்துவ கல்லூரிகளில் செயல்திட்டம்

- வளரிளம் பருவத்தினரின் நலவாழ்வு குழுக்கல் அமைத்தல்
- மருத்துவ கல்லூரி மருத்துவ மனைகளில் வளரிளம் பருவத்தினருக்கு தனியாக சிகிச்சை அளிக்கும் பிரிவை அமைத்தல்
- ஒத்த வயதுள்ள செவிலியர்கள் அடங்கிய மருத்துவ குழு தொலைதூர இடங்களுக்கு சென்று வளரிளம் பருவத்தினருக்கு மருத்துவ பரிசோதனை முகாம், ஆலோசனைகள் அனைத்தும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- இந்த மருத்துவ முகாம்களின் மூலம் ஆய்வக பரிசோதனை, ஆலோசனை, வழிகாட்டுதல், போன்ற பணிகள் செயல்பட திட்டமிடப்பட்டுள்து
- வளரிளம் பருவத்தினருக்கு ஏற்படக்கூடிய நலவாழ்வு பிரச்சனைகளை ஆராய்வதற்கும் அறிவதற்கும் தனியாக மையம் ஒன்று துவங்கப்பட உள்ளது.

**இந்த திட்டத்தின் மொத்த செலவினம் ஆண்டுக்கு ரூ. 3.25 கோடி**

—x— x —

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.